FWC

# பொதுச் சாதாரணப் பரீட்சை
# Common General Test

Two Hours | Gr -12 (2022) | 12 | T

**கவனிக்க :**

- 1 - 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (✕) இடுக.

01. இலங்கையின் 2020 ஆண்டுக்குரிய மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகேற்ப பல தசாப்தங்களாக இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நலனோம்பலை பின்வரும் எந்தச்சுட்டி மிகப்பொருத்தமாக வெளியிடவில்லை?
   1) சராசரி எழுத்தறிவு வீதம் 92.9
   2) சராசரி ஆயட்காலம் 75.5
   3) செப்பமற்ற பிறப்பு விகிதம் 1000 இற்கு 13.8
   4) குடித்தொகையடர்த்தி சதுரகிலோமீற்றருக்கு 350
   5) மனிதவள அபிவிருத்திசுட்டி 0.766

02. இலங்கை மத்திய வங்கி தனது 70 ஆண்டு பூர்த்தியை நிறைவு கூறுமுகமாக வெளியிட்ட 20 ரூபா நாணயக்குற்றியின் வடிவம் எது?
   1) நாற்பக்கல் 2) ஐங்கோணி 3) அறுகோணி 4) எழுகோணி 5) எண்கோணி

03. இலங்கையின் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக இந்தியாவிலிருந்து முதன்முதல் எத்தடுப்பூசி பெறப்பட்டு இலங்கையருக்கு வழங்கப்பட்டது?
   1) ஸ்புட்னிக் - V 2) சினோபார்ம் 3) அஸ்ராஜெனகா
   4) அஸ்ராசெனிகா 5) கோவாக்ஸ்

04. தெற்காசியாவின் முதலாவது 5G வலையமைப்பு எந்நாட்டின் சிலநகரங்களில் March 2021 இல் ஆரம்பிக்கப்பட்டது?
   1) இந்தியா 2) இலங்கை 3) பூட்டான் 4) மாலைதீவு 5) பாகிஸ்தான்

05. உலகத்திற்கு வெளியே முதன்முதல் செவ்வாய்கிரகத்தில் ஹெலிகொப்ரரை நாசா நிறுவனம் பறக்கவிட்டது. இதில் யாருடைய நினைவுச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.
   1) ரைட்சகோதரர் 2) நீலாம்ஸ்ரோங் 3) யூரிக்காரின்
   4) கல்பனாசவ்லா 5) மைக்கேல்கொலின்ஸ்

06. யூன் 2021 இல் எந்நாட்டின் பாராளுமன்றம் கருணை கொலையை நாட்டில் நடைமுறைப்படுத்த அங்கீகரித்தது?
   1) ஸ்கொட்லாந்து 2) லக்சம்பேர்க் 3) பிரிட்டன் 4) ஸ்பெயின் 5) பிரான்ஸ்

07. 2020 ஆண்டு உலகின் தலைசிறந்த ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டவர் யார்?
   1) பிற்றர்தபேசி (Peter tabichi) 2) ரஜித்சிங் டிசலி (Rangitsinh Disale)
   3) Andvia zfirakon 4) Nancia Atwell 5) Hanan Alhroup

08. உலக பத்திரிகை சுதந்திரதினம் கொண்டாடப்படுவது எத்தினமாகும்?
   1) April - 23 2) May - 3 3) August - 9 4) September - 21 5) December - 3

09. 2021 ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் தேர்தலில் வெற்றிபோன்ற “இட்ரிஸ் டெபி” என்பவர் அதே மாதத்தில் இறந்தார். இவர் எந்தநாட்டின் அதிபராக இருந்தார்?
1) தன்சானியா 2) சூடான் 3) சாட் 4) நாவுறு 5) கென்யா

10. சுவேஸ் கால்வாயின் இரு கரைகளையும் அடைத்துக்கொண்ட கப்பலின் பெயர் என்ன?
1) Evergiven 2) Orient Queen 3) Queen of North 4) Emmy Rose 5) Jascon – 4

❖ **11 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்க.**

11. ஞாயிற்றுக்கிழமைக்கு நான்கு நாட்களிற்கு முன்னைய நாளானது நாளைய தினமாகும். அவ்வாறெனின் இன்று என்ன நாளாகும்.
1) திங்கட்கிழமை 2) செவ்வாய்க்கிழமை 3) புதன்கிழமை
4) ஞாயிற்றுக்கிழமை 5) சனிக்கிழமை

❖ **12 தொடக்கம் 13 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

பச்சை நிறத்தினால் நிறந்தீட்டப்பட்ட 3 x 3 x 3 சென்றிமீற்றர் மரத்திலான சதுரமுகி ஒன்று உள்ளது.. இந்த சதுரமுகியானது 1 x 1 x 1 சென்றிமீற்றர் பரிமாணங்களிலான சிறிய சதுரமுகிகளாக வெட்டி அகற்றப்பட்டன.

12. பச்சை நிறம் பூசப்பட்ட பக்கங்கள் ஒன்றை கொண்ட எத்தனை சிறிய சதுரமுகிகள் இங்கு உள்ளன?
1) 4 2) 6 3) 12 4) 16 5) 20

13. ஒரு சதுர அங்குலத்தை நிறந்தீட்டுவதற்காக ஒரு மில்லிமீற்றர் பச்சைநிறப் பூச்சு அவசியம் எனின் நிறந்தீட்டப்படாத சிறிய சதுரமுகிகளின் எல்லா பக்கங்களையும் நிறந்தீட்டுவதற்காக தேவையான பூச்சின் அளவு எத்தனை மில்லிமீற்றர்களாகும்?
1) 6 2) 12 3) 54 4) 108 5) 118

14. A என்ற நகரில் இருந்து காலை 5.00 மணியில் இருந்து ஒவ்வொரு 30 நிமிடங்கள் ஒரு தடவை B என்ற நகருக்கு பேரூந்தொன்று புறப்படும். B என்ற நகரில் இருந்து காலை 5.00 மணிக்கு ஒவ்வொரு 30 நிமிடங்களுககும் ஒரு தடவை A என்ற நகருக்கு பேரூந்தொன்று அதே கதியிலேயே புறப்படுகிறது. ஒவ்வொரு பேரூந்தும் பயணத்திற்காக மூன்று மணித்தியாலங்களைச் செலவிடுகிறது. A என்ற நகரில் இருந்து காலை 9.00 புறப்படும் பேரூந்தொன்றிற்கு பயணத்தின் போது B என்ற நகரில் இருந்து புறப்படும் எத்தனை பேரூந்துகளை வழியில் சந்திக்க முடியும்?
1) 6 2) 7 3) 9 4) 11 5) 12

15. கீழே தரப்பட்ட A மற்றும் B என்ற இரு உருவாக்கங்களையும் ஒன்றாக ஒட்டும் போது கிடைக்கும் இணைந்த உருவாக இருக்க முடிவது எது?


(A)


(B)


(1)


(2)


(3)


(4)

16. நீளத்தில் சமனான கீலங்கள் ஆறு உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய சமபக்க முக்கோணிகளின் உயர்ந்த பட்ச எண்ணிக்கை எவ்வளவு?
1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

17. உத்தமன் என்பவர் நெருப்புக் குச்சிகளினால் கீழே காட்டப்பட்ட உரோம இலக்கங்களினால் சமன்பாட்டை அமைத்தார்.



இந்த சமன்பாடு தொடர்பாக உள்ள கீழேயுள்ள கூற்றுக்களைக் கருதுக.

i. பிரியன் இவ்வாறு கூறினார் "என்னால் ஒரு தீக்குச்சியை மட்டும் வேறு இடத்தில் வைத்து சமன்பாட்டை சரி செய்யமுடியும்."

ii. லாபீர் இவ்வாறு கூறினார் "எனக்கு ஒரு தீக்குச்சியை மட்டும் அகற்றி சமன்பாட்டைச் சரி செய்யமுடியும்."

iii. ஜனகன் இவ்வாறு கூறினார் "எனக்கு ஒரு தீக்குச்சியையாவது தொடாமல் சமன்பாட்டைச் சரி செய்யமுடியும்"

இந்த கூற்றுக்களுள்,

1) (i) மட்டும் உண்மையாகும். 2) (ii) மட்டும் உண்மையாகும். 3) (i), (ii) மட்டும்.
4) (iii) மட்டும் உண்மையாகும். 5) (i), (ii), (iii) ஆகிய எல்லாம் உண்மையானவை.

18. தாயக்கட்டையொன்றினது X, Y, Z என்ற மூன்று அமைவுகள் கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளன x என்ற அமைவிலே அடியில் உள்ள எண் என்ன?



1) ○ 2) △ 3) ∗ 4) ⊕ 5) ○ அல்லது △

19. கீழே காட்டப்பட்டுள்ள வரிப்படத்திலே நான்கு பக்கங்களைக் கொண்ட எத்தனை உருவங்கள் உள்ளன?



1) 22 2) 24 3) 25 4) 28 5) 36

20. மணியினது பிறந்த நாள் விருந்திற்காக எட்டு நண்பர்கள் கலந்து கொண்டனர். எல்லா நண்பர்களும் மற்றைய எல்லா நண்பர்களுக்கும் கைலாகு கொடுத்தனர். அவ்வாறு எத்தனை கைலாகுகள் நடைபெற்றன.

1) 14 2) 21 3) 28 4) 36 5) 72

❖ **21 தொடக்கம் 22 வரையிலான ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தரப்பட்ட தகவலிலிருந்து தெரிவு செய்க.**

➢ 'சதா' மற்றும் 'தனா' ஆகியோர் நண்பர்கள் இருவராவார்கள். ஒருவர் திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் பொய் பேசுவதுடன் கிழமையின் எஞ்சிய எல்லா நாட்களிலும் உண்மையையே பேசுவார். மற்றையவர் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளிலே பொய் பேசுவதுடன் எஞ்சிய எல்லா நாட்களிலும் உண்மையையே பேசுவார்.

- சதா : நாள் சனிக்கிழமைகளில் பொய் பேசுவேன்.
- தனா : நான் நாளை பொய் பேசுவேன்.
- சதா : நான் ஞாயிற்றுக்கிழமைகளில் பொய் பேசுவேன்.

21. இவ்வாறு கூறியது கிழமையின் என்ன நாளாகும்?

1) ஞாயிறு 2) திங்கள் 3) புதன் 4) வெள்ளி 5) சனி

22. சதா பொய்யும் தனா உண்மையும் பேசும் நாளாக அமைவது எது?
1) ஞாயிறு 2) திங்கள் 3) வியாழன் 4) வெள்ளி 5) சனி

கடம்பன் தனது நண்பனான முனியாண்டிக்கு மூன்று மகன்மார் இருப்பதாக அறிந்திருந்தார்.

- கடம்பனுக்கு பிள்ளைகளினது வயதை அறிய வேண்டிய தேவை ஏற்பட்டது.
- முனியாண்டி அதற்கு தகவல் ஒன்றை வழங்கினார்.
- "அவர்களின் வயதுகளின் பெருக்கம் 36 ஆகும்."
- கடம்பன் அவரிடம் மேலும் தகவல்கள் வேண்டும் எனக் கூறினார். அவர் முனியாண்டிக்கு மேலுமொரு உதவியொன்று வழங்கினார்.
- "அவர்களினது வயதுகளின் கூட்டுத்தொகை எமது வீட்டு இலக்கத்திற்கு சமனாகும்." அது ஈரிலக்க சம எண்களாகும்.
- முனியாண்டி வீட்டு இலக்கத்தைப் பார்த்து இவ்வாறு கூறினார்.
- "வயதைச் சரியாக கூற இன்னுமொரு தகவல் வேண்டும்" அப்போது முனியாண்டி இன்னுமொரு தகவலை வழங்கினார்.
- "எனது மூத்த மகன் மட்டும் பாடசாலைக்குச் செல்கிறார்" அப்போது முனியாண்டி சரியாக வயதைக் கூறினார்.

23. இதற்கேற்ப மூத்த மகனினது வயது எத்தனை வருடங்களாகும்?
1) 6 2) 9 3) 12 4) 18 5) 20

24. இளைய மகனின் எத்தனை மடங்கு மூத்தமகனின் வயது யாது?
1) 2 2) 3 3) 4 4) 5 5) 6

25. a, b, c, d என்பன நான்கு எண்களாகும். a : b = 2 : 3, b : c = 4 :5, உம் c : d = 9 : 7 எனின், a : d இற்கு சமனாவது எது?
1) 10 : 22 2) 16 : 21 3) 44 : 61 4) 12 : 35 5) 24 : 35

26. A, B, C ஆகியோர் ஒன்றாக 10 நாட்களில் குறித்தவொரு வேலையொன்றை நிறைவு செய்வார்கள். A யும் C யும் ஒன்றாக 15 நாட்களில் இந்த வேலையை நிறைவு செய்வதுடன் C யும் B யும் ஒன்றிணைந்து 20 நாட்களிலே அதனை நிறைவு செய்வார்கள். சம்பளமானது செய்யப்படும் வேலையிள் அளவிற்கேற்ப வழங்கப்படும் எனின் A, B, C ஆகியோரின் சம்பளங்களுக்கிடையிலான விகிதம் யாது?
1) 3 : 2 : 1 2) 1 : 2 : 3 3) 2 : 1 : 3 4) 3 : 1 : 2 5) 3 : 2 : 6

27. தந்தையினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 130 வருடங்களாகும். ஐந்து வருடங்களுக்கு முன்னர் அவர்களின் வாயுகளுக்கிடையிலான விகிதம் 5 : 3 ஆகும். பத்து வருடங்களுக்குப் பின்னர் தந்தையினதும் மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதமானது யாது?
1) 5 : 3 2) 2 : 1 3) 3 : 2 4) 4 : 3 5) 17 : 11

28. கீழே தரப்பட்ட எந்த வென்வரிப்படத்திலே ஆண்கள், தந்தைமார் மற்றும் ஆண் ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்பு காட்டப்படுகிறது?

1) 
2) 
3) 
4) 
5) 

❖ **29, 30 வினாக்களில் அடுத்துவரும் உறுப்பைத் தெரிக.**

29. 

1)  2)  3)  4)  5) 

30. 



(1) (2) (3) (4) (5)

❖ **31 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்க.**

31. ஆண்பிள்ளைகளின் வரிசையிலே சித்திக் என்பவர் முன்னால் இருந்து 7 ஆவதாக இருப்பதுடன் விதுரன் என்பவர் பின்பக்கத்தில் இருந்து 13 ஆவதாகவும் இருப்பின் அவர்கள் ஒவ்வொருவரும் தமது இடங்களை மாற்றிக் கொள்ளும் போது சித்திக் என்பவர் முன்னால் இருந்து 22 ஆவது நபராக உள்ளார். அவ்வாறெனின் வரிசையிலே எத்தனை ஆண் பிள்ளைகள் உள்ளனர்.

1) 19 2) 31 3) 33 4) 34 5) 35

32. பெட்டியொன்றிலே ஒன்றிற்கொன்று வெவ்வேறு நான்கு நிறங்களாக பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு என்பனவற்றில் நான்கு மாபிள்கள் படி 16 கண்ணாடி மாபிள்கள் உள்ளன. நீர் கண்களை மூடியபடி எழுமாறாக தடவைக்கு ஒரு மாபிள் எடுத்தால் ஒரே நிறத்திலான மாபிள்கள் இரண்டைப் பெறுவதற்காக குறைந்த பட்சம் எத்தனை மாபிள்களை வெளியே எடுக்கவேண்டும்?

1) 3 2) 4 3) 5 4) 6 5) 18

33. குடும்பமொன்றினது ஐந்து பேரினது வயதுகளின் கூட்டுத்தொகை 107 வருடங்களாகும்.

- நந்தினி மற்றும் அகிலாவினது வயதுகளின் கூட்டுத்தொகை 29 வருடங்களாகும்.
- அகிலாவினதும் பரதனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 44 வருடங்களாகும்.
- பரதனினதும் ஜானகியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 57 வருடங்களாகும்.
- ஜானகியினதும் சுவேதாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 46 வருடங்களாகும்.

இதற்கேற்ப பரதனின் வயது யாது?

1) 12 2) 17 3) 25 4) 32 5) 35

34. இவர்களில் வயதில் குறைந்தவர் யார்?

1) நந்தினி 2) அகிலா 3) சுவேதா 4) ஜானகி 5) பரதன்

35. ஆறு மனிதர்களுக்கு வீடொன்றை 15 நாட்களில் கட்டி முடிக்க முடியும் எனின் எல்லா மனிதர்களும் ஒரே செயற்றிறனுடன் வேலை செய்கிறார்கள் என கருதும் போது மூன்று மனிதர்களும் அதனை கட்டுவதற்கு எவ்வளவு நாட்கள் செலவாகும்?

1) 12 2) 18 3) 24 4) 30 5) 48

36. மோட்டார் வாகனமொன்று அதன் பயணத்தினது முதல் அரைவாசி தூரத்தை சராசரியாக மணித்தியாலம் 40 கிலோமீற்றர் வேகத்திலும் இரண்டாவது அரைவாசி தூரத்தை சராசரியாக மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வேகத்திலும் பயணிக்கிறது. அதற்கேற்ப மொத்த பயணத்தின் சராசரி வேகம் மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றர்களாகும்?

*1)* 36 *2)* 48 *3)* 50 *4)* 54 *5)* 60

❖ **37 தொடக்கம் 38 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்த கோலத்திற்கு எண்கள் இடப்பட்ட நான்கு உருவங்கள் தரப்பட்டுள்ளன. அந்தக் கோலத்திற்கு ஏற்ப ஒவ்வொரு கோலத்திலும் ? என்ற குறியீடு உள்ள இடத்திற்கு பொருத்தமான இலக்கத்தை தெரிவு செய்து அதற்குரிய பொருத்தமான இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

37. 


*1)* 8 *2)* 9 *3)* 10 *4)* 12 *5)* 15

38. 


*1)* 3 *2)* 4 *3)* 6 *4)* 7 *5)* 8

39. பாடசாலையொன்றிலே 100 பெண்பிள்ளைகளிடையே நடாத்தப்பட்ட மதிப்பீடொன்றிலே 83 பேருக்கு வெள்ளை நிறப் பையும் 77 பேருக்கு கறுப்பு நிற சப்பாத்துகளும் 64 பேருக்கு குடையும் 95 பேருக்கு தண்ணீர் போத்தலும் உள்ளன. இந்த தகவல்களுக்கு அமைய நான்கு பொருட்களையும் கொண்ட பெண் பிள்ளைகளின் மிகக் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

*1)* 15 *2)* 17 *3)* 21 *4)* 28 *5)* 30

40. மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்திலே பயணம் செய்யும் புகையிரமொன்று 3.65 கிலோமீற்றர் நீளமான குகையினுள் செல்கிறது. புகையிரதத்தின் நீளம் 0.35 கிலோமீற்றர்களாகும். புகையிரதத்திற்கு குகையினை முழுமையாக கடந்து செல்வதற்கு எத்தனை நிமிடங்கள் செலவாகும்?

*1)* 0.3 *2)* 3.3 *3)* 3.6 *4)* 4.5 *5)* 4.8

41. கீழே தரப்பட்டுள்ள உருவிலே தெரிகின்ற பகுதியிலே என்ன பகுதி நிழற்றப்பட்டுள்ளது?



*1)* $\frac{13}{36}$ *2)* $\frac{7}{18}$ *3)* $\frac{11}{36}$ *4)* $\frac{1}{9}$ *5)* $\frac{1}{5}$

42. உம்மிடம் சிறிய தாயக்கட்டைகள் 59 மட்டும் காணப்படுகின்றன. வேறொரு பெரிய சதுரமுகியை அமைப்பதற்காக அவற்றில் அப்புறப்படுத்த வேண்டிய மிகக் குறைந்த தாயக்கட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

1) 12 2) 16 3) 27 4) 32 5) 35

43. கீழேயுள்ள உருவிலே நான்கு வட்டங்களினால் துவிச்சக்கர வண்டியினது போக்குவரத்து பாதைகள் நான்கு வகை குறிப்பிடப்படுகின்றன.

- A, B, C, D என்ற நான்கு துவிச்சக்கர வண்டி செலுத்துபவர்கள் காலை 6 மணிக்கு மத்தியிலே (P) யில் இருந்து பயணத்தை ஆரம்பித்தனர்.
- ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி செலுத்துபவர்களும் வெவ்வேறு பாதைகளில் அவற்றைச் செலுத்துவதுடன் A என்பவர் மணிக்கு 3 கிலோமீற்றர் வேகத்திலும் B என்பவர் மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்திலும் C என்பவர் மணிக்கு 12 கிலோமீற்றர் வேகத்திலும் D என்பவர் மணிக்கு 15 கிலோமீற்றர் வேகத்திலும் செலுத்துகின்றனர்.
- ஒவ்வொரு பாதையினதும் நீளம் ஒரு கிலோமீற்றர்களாகும்.




அவ்வாறெனின் அவர்கள் முதல் தடவையாக மீண்டும் மத்தியிலே P இல் சந்திக்கும் நேரம் என்ன?

1) மு.ப 6.20 2) மு.ப 6.30 3) மு.ப. 7.00 4) மு.ப 7.30 5) மு.ப. 8.00

44. கீழே தரப்பட்டுள்ள முதல் இருதராசுகளும் இருபக்கங்களிலும் சமநிறைகளை உடையவை.




இரு பக்கங்களினதும் நிறைகள் சமமாக இருக்கத்தக்கதாக மூன்றாம் தராசின் வலப்பக்கத்துக்குச் சேர்க்கப்பட வேண்டிய நிறையை உள்ளடக்கும் விடையைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிந்தெடுக்க.

1) 2) 3) 4) 5)



❖ **45 ஆம் 46 ஆம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாய் கொண்டவை.**

F, G, H, I, N, O, P என்ற ஏழு பெருந்தகையாளர்களை அரசகரும வைபவம் ஒன்றின் போது ஒருமிக்க அமர்ந்திருக்கச் செய்தல் வேண்டும். அவர்கள் ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டும் முன்னாலிருந்து பின்னோக்கி 1 தொடக்கம் 7 வரைக்கும் தொடர்ச்சியான இலக்கமிடப்பட்டும் உள்ள ஏழு கதிரைகளில் அமர்ந்திருத்தல் வேண்டும். அமரும் ஒழுங்குகள் பின்வரும் விதிகளுடன் இணங்குதல் வேண்டும்.

- ➢ O வின் கதிரைக்கு உடனடியாகப் பின்னால் இருக்கும் கதிரையில் F அமருதல் வேண்டும்.
- ➢ N இன் கதிரைக்கு உடனடியாகப் முன்னால் இருக்கும் கதிரையிலும் N இன் கதிரைக்கு உடனடியாகப் பின்னால் இருக்கும் கதிரையிலும் G அமர முடியாது.
- ➢ H இன் கதிரைக்கும் P யின் கதிரைக்கும் இடையே செப்பமாக இரு கதிரைகள் இருத்தல் வேண்டும்.
- ➢ I யின் கதிரைக்கும் P யின் கதிரைக்குமிடையே குறைந்தபட்சம் ஒரு கதிரையேனும் இருத்தல் வேண்டும்.
- ➢ கதிரை 3 இல் N அமருதல் வேண்டும்.

45. கதிரை 1 தொடக்கம் கதிரை 7 வரைக்குமான அமர்வு ஒழுங்குகளில் எது விதிகளுடன் இணங்குகின்றது?

1) FINPGOH 2) GPNIHOF 3) IGNPOFH 4) IHNPOFG 5) OFHNIPG

46. F கதிரை 6 இலும் H கதிரை 7 இலும் அமர்ந்தால் பின்வரும் பெருந்தகையாளர்களில் எவர் கதிரை 2 இல் அமருதல் வேண்டும்?

1) G 2) I 3) N 4) O 5) P

❖ **47 ஆம் 48 ஆம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாய் கொண்டவை.**

ஒரு திண்மச் சதுரமுகி பன்னிரண்டு ஓரங்களை உடையது அதன் மூலைகளில் மூன்று ஒரே விதமாக வெட்டப்பட்டு, ஆரம்ப ஓரங்கள் எல்லாம் முன்னர் இருந்த நிலையிலேயே இருக்க விடப்பட்டுள்ளன. ஒரு மூலையை வெட்டி எடுத்த பின்னர் உள்ள தோற்றம் வரிப்படத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.



47. புதிய திண்மத்துக்கு எத்தனை உச்சிகள் இருக்கின்றன?

1) 9 2) 10 3) 11 4) 12 5) 14

48. புதிய திண்மத்துக்கு எத்தனை விளிம்புகள் இருக்கின்றன?

1) 12 2) 15 3) 18 4) 21 5) 24

❖ **49 ஆம் 50 ஆம் வினாக்கள் பரீட்சை ஒன்றில் A, B, C, D, E, F, G என்ற ஏழு பரீட்சார்த்திகள் புள்ளிகள் பற்றிய பின்வரும் தகவல்களை அடிப்படையாய் கொண்டவை.**

- G யின் புள்ளிகள் F பெற்ற புள்ளிகள் இரு மடங்காகும்.
- D யின் புள்ளிகள் ஏனைய பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளிலும் பார்க்க குறைந்தனவாகும்.
- A யின் புள்ளிகளும் C யின் புள்ளிகளும் சமம்.
- B யின் புள்ளிகள் F இன் புள்ளிகளினதும் G யின் புள்ளிகளினதும் மொத்ததுக்குச் சமம்.
- E யின் புள்ளிகள் B, C, G ஆகியோரின் புள்ளிகளின் மொத்தத்துக்குச் சமம்.
- A யின் புள்ளிகள் B யின் புள்ளிகளினதும் G யின் புள்ளிகளினதும் மொத்தத்துக்குச் சமம்.

49. பரீட்சார்த்திகளில் எவர் இக்குழுவில் அதியுயர் புள்ளிகளைப் பெற்றார்?

1) A 2) B 3) C 4) E 5) F

50. எம்மூன்று பரீட்சார்த்திகளின் புள்ளிகளின் மொத்தம் E பெற்ற புள்ளிகளுக்குச் சமம்?

1) A, C, G 2) C, G, F 3) A, B, G 4) G, F, D 5) B, G, F